https://t.me/The_firstpost
JFTU

▲ ஊதிய உயர்வை அமல்படுத்த வேண்டும், தனியார் சட்டத் திருத்த மசோதாவை கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, அரசு பொதுக் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள் நேற்று ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். படம்: ம.பிரபு

ஊதிய உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி

காப்பீட்டு நிறுவன ஊழியர்கள் வேலைநிறுத்தம்

■ **சென்னை**

அரசு பொதுக் காப்பீட்டு நிறுவன ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று ஒரு நாள் நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதை ஒட்டி, சென்னையில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று பேசிய கூட்டுப் போராட்டக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் ஜி.ஆனந்த் கூறியதாவது:

பொதுத்துறை காப்பீட்டு நிறுவன ஊழியர்களுக்கான ஊதிய உயர்வு கடந்த 2017 ஆகஸ்ட் 1-ம் முதல் கடந்த 54 மாதங்களாக நிலுவையில் உள்ளது. இந்த ஊதிய உயர்வை உடனடியாக அமல்படுத்த வேண்டும். பொது இன்சூரன்ஸ் தனியார்மய சட்டத் திருத்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், அதை செயல்படுத்தக்கூடாது.

புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு விட்டு, அனைவருக்கும் 1995-ம் ஆண்டு ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வேண்டும்.

அரசு பொதுக் காப்பீட்டு நிறுவனங்களான நியூ இந்தியா இன்சூரன்ஸ், ஓரியண்டல் இன்சூரன்ஸ், நேஷனல் இன்சூரன்ஸ் மற்றும் யுனைட்டெட் இந்தியா இன்சூரன்ஸ் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய 16 சங்கங்களை சேர்ந்த 50 ஆயிரம் ஊழியர்கள், அதிகாரிகள் நாடு முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர்.

தமிழகத்தில் 5 ஆயிரம் பேர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், 500-க்கும் மேற்பட்ட காப்பீட்டு நிறுவன அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன. இந்த வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாக, நாடு முழுவதும் ரூ.300 கோடி அளவுக்கு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளது என்றார்.

இப்போராட்டத்தில், அகில இந்திய எஸ்சி, எஸ்டி ஊழியர் பரிஷத் அமைப்பைச் சேர்ந்த ஜி.ஜெயமூர்த்தி, அகில இந்திய ஓபிசி ஊழியர் நலச்சங்கத்தின் முருகன், அகில இந்திய எஸ்சி, எஸ்டி ஊழியர்நலச் சங்கத்தின் பாலமுருகன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சென்னை கத்திப்பாரா அருகே நடைபெறும்

வேளாண் பூங்கா பணிகள் விரைவில் நிறைவுபெறும்

■ **சென்னை**

சென்னை கிண்டியில் ரூ.35 கோடி மதிப்பில் 6.8 ஏக்கர் பரப்பளவில் நடந்து வரும் வேளாண் பூங்கா பணிகளை வரும் மார்ச் இறுதிக்குள் முடிக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

சென்னை கிண்டி கத்திப்பாரா அருகில், 6.8 ஏக்கர் பரப்பில் வேளாண் துறையின் வேளாண் வணிகம் மற்றும் சந்தைப்படுத்துதல் பிரிவின் சார்பில் பசுமைப் பூங்கா அமைக்கும் பணி நடந்து வருகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை நடைபயிற்சி மேற்கொள்ளும் வகையில் பூங்காவுக்கு உள்ளேயும், வெளியிலும், அகலமான நடைபாதை அமைக்கப்படுகிறது.

வண்ணத்துப் பூச்சி பூங்கா

மேலும், நறுமண தாவரங்கள், பூச்செடிகளை மாணவர்கள் அறிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், பலவகையான மரங்கள், பூச்செடிகள், புல்வெளிகள் என பூங்கா முழுவதும் பசுமையான சூழல் இருக்கும் வகையில் உருவாக்கப்படுகிறது. இதுதவிர, இப்பூங்காவில் ரூ.15 லட்சம் மதிப்பில் வண்ணத்துப் பூச்சி பூங்காவும் அமைக்கப்படுகிறது.

பூங்காவில் 3 தளங்கள் கொண்ட கட்டிடம் கட்டப்படுகிறது. தரைதளத்தில் உணவு அருந்தும் இடம், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் அரங்குகள், பயிற்சி அரங்குகள் இடம்பெறுகின்றன. முதல் மற்றும் 2-ம் தளங்களில் சிறிய திரையரங்கம், உணவு பரிசோதிக்கும் கூடம், பூச்சி மற்றும் நோய் கண்டறியும் ஆய்வகம், பூச்சிகள் அருங்காட்சியகம் அமைகின்றன. மூன்றாம் தளத்தில் அதிகாரிகளுக்கான அலுவலகங்கள் அமைகின்றன.

உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் அரங்கங்களில், மலைப்பகுதிகளில் விளையும் பொருட்கள் கண்காட்சியும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இப்பூங்காவில் இயற்கை வேளாண்மை, காளான் வளர்ப்பு, மாடித்தோட்டம் அமைப்பது போன்ற புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான நேரடி மாதிரிகள், செயல் விளக்கங்கள், பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளன.

பூங்காவுக்கான பணிகள் வேகமாக நடந்துவரும் நிலையில், மார்ச் இறுதிக்குள் அனைத்து பணிகளையும் முடிக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளது.

குரூப்-4, குரூப்-2 தேர்வுகளுக்கு புதிய பாடத்திட்டம்

● டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் வெளியீடு

■ **சென்னை**

குரூப்-4, குரூப்-2, குரூப்-2-ஏ உள்ளிட்ட பல்வேறு தேர்வுகளுக்கான புதிய பாடத்திட்டம், டிஎன்பிஎஸ்சி இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

டிஎன்பிஎஸ்சி குரூப்-2, குரூப்-2-ஏ முதல்நிலைத் தேர்வு மற்றும் குரூப்-4, குரூப்-3, குரூப்-7-பி, குரூப்-8 மற்றும் சிறை அலுவலர் தேர்வு, உதவி சிறை அலுவலர் தேர்வு ஆகியவற்றுக்கான கட்டாய தமிழ்மொழி தகுதித்தேர்வுக்கான (கொள்குறிவகை) மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டம் தேர்வாணையத்தின் இணையதளத்தில் (www.tnpsc.gov.in) வெளியிடப்பட்டு இருப்பதாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் பி.உமா மகேஸ்வரி தெரிவித்துள்ளார்.

குரூப்-2 மற்றும் குரூப்-2-ஏ தேர்வுக்கான அறிவிப்பு வரும் பிப்ரவரி மாதத்திலும், குரூப்-4 தேர்வுக்கான அறிவிக்கை மார்ச் மாதத்திலும் வெளியிடப்படும் என டிஎன்பிஎஸ்சி ஏற்கெனவே அறிவித்து உள்ளது. இந்நிலையில், இத்தேர்வுகளுக்கு தற்போது புதிய பாடத்திட்டம் வெளியிடப்பட்டு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திமுக எம்எல்ஏ மீது நடவடிக்கை எடுக்க அன்புமணி வலியுறுத்தல்

■ **சென்னை**

பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி நேற்று தனது ட்விட்டர் பதிவுகளில் கூறியிருப்பதாவது:

சென்னை திருவொற்றியூரில் சாலை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மாநகராட்சிப் பொறியாளரை, திமுக சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.சங்கரும், அவரது ஆதரவாளர்களும் தாக்கியுள்ளனர். 13 லாரிகளில் வந்த தார், ஜல்லிக் கலவையையும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

மக்கள் பிரதிநிதியே இத்தகைய செயல்களில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது. இது குறித்து காவல் துறையில் புகார் அளிக்க மாநகராட்சி தயங்குவது ஏன்? தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடப்பதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் இதேபோன்ற செயல்கள் தமிழகம் முழுவதும் அதிகரித்து விடும். எனவே, உடனடியாக மாநகராட்சியிடம் புகார் பெற்று, திமுக சட்டப்பேரவை உறுப்பினர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கும்மிடிப்பூண்டி தனியார் நிறுவன தொழிலாளர்கள் போராட்டத்தில்

முதல்வர் தலையிட்டு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய ராமதாஸ் அறிவுறுத்தல்

■ **சென்னை**

கும்மிடிப்பூண்டியை அடுத்த எளாவூர் தனியார் நிறுவன தொழிலாளர்கள் போராட்டத்தில் முதல்வர் தலையிட்டு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கும்மிடிப்பூண்டியை அடுத்த எளாவூரில் செயல்பட்டு வரும் எலெக்ட்ரோ ஸ்டீல் காஸ்டிங்ஸ் தொழிற்சாலை, கொல்கத்தாவை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் நிறுவனத்தின் கிளை ஆகும். எளாவூர் தொழிற்சாலையில் 200-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

ஆண்டுதோறும் ஊதிய உயர்வு, தீபாவளி போனஸ் உள்ளிட்டவை மறுக்கப்பட்டு வந்த நிலையில், தங்களின் உரிமைகளை மீண்டும் வழங்க வேண்டும் என்று தொழிலாளர்கள் கடந்த 24 நாட்களாக தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். ஆனால், தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த ஆலை நிர்வாகம் மறுத்து வருகிறது. மேலும், போராடி வரும் தொழிலாளர்களை மிரட்டி பணியவைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

தொழிலாளர்களுக்கு எதிராக..

உள்ளூர் தொழிலாளர்களுக்கு மாற்றாக வட இந்தியர்கள் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். கடந்த அக்டோபர் மாதம் ஆலை நிர்வாகத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பங்கேற்று ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட கும்முடிப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர், இப்போது ஆலை நிர்வாகத்துக்கு ஆதரவாகவும், தொழிலாளர்களுக்கு எதிராகவும் செயல்படுவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

உரிமைகளைக் கோரும் தொழிலாளர்களை பணி நீக்கம் செய்வதும், போராடும் தொழிலாளர்களை மிரட்டுவதும், அந்த அநீதிக்கு மக்கள் பிரதிநிதிகள் துணை போவதும் எந்த வகையிலும் நியாயமில்லை. இந்த நிலை மாற்றப்பட வேண்டும். தொழிலாளர்களின் போராட்டம் குறித்த விவகாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக தலையிட வேண்டும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளை அனுப்பி தொழிற்சாலை நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி, நீக்கப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் பணியில் சேர்க்க வேண்டும் என்பன உள்ளிட்ட நியாயமான கோரிக்கைகள் அனைத்தையும் ஏற்கச் செய்ய வேண்டும். அதை செய்ய ஆலை மறுக்கும்பட்சத்தில் அதன் மீது தமிழக அரசு சட்டங்களின்படி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உள்ளூர் தொழிலாளர்களின் வேலைவாய்ப்புகள் பறிக்கப்படுவதைத் தடுக்க தனியார் தொழில் நிறுவனங்களில் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு 80 சதவீத வேலை வழங்கும் சட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்து உள்ளார்.

▲ சென்னை தியாகராய நகரில் சாலையின் நடுவே சற்றே பெரிய பட்டாம்பூச்சி ஒன்று அடிபட்டு விழுந்தது. தொடர்ச்சியாக வாகனங்கள் வந்தபடி இருந்ததால், பறக்க முடியாமல் தவித்தது. இதைக் கண்ட ஒருவர், பட்டாம்பூச்சியை பத்திரமாக எடுத்து, சாலையோரமாக விட, சிறிது நேரத்தில் மீண்டும் சிறகடித்து பறந்து சென்றது. படங்கள்: ம.பிரபு

ஆளப் பிறந்தோம்!
உள்ளுணர்வுகளை உயர்த்துவோம்

SHANKAR IAS ACADEMY
உடன் இணைந்து
இந்து தமிழ் திசை
வழங்கும்

யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கான ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சி

தேதி : 30.01.2022 (ஞாயிற்றுக்கிழமை), நேரம் : 10:30 am to 1:00 pm

வெ.கீர்த்தி வாசன், ஐஏஎஸ்
சப் -கலெக்டர்
பெர்ஹாம்பூர்
கஞ்சாம் மாவட்டம், ஒடிசா

செல்வி ப.கௌசல்யா
வருவாய் கோட்ட ஆட்சியர்
உத்தமபாளையம்
தேனி மாவட்டம்

டாக்டர் எஸ்.டி. வைஷ்ணவி
இயக்குநர்,
சங்கர் ஐஏஎஸ் அகாடமி

ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎஃப்எஸ் தேர்வுகள் மற்றும் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளில் வெற்றி பெற, உங்களுக்கான ஆன்லைன் வழிகாட்டி நிகழ்ச்சி இது.

இந்நிகழ்வில் பங்கேற்க பதிவு செய்க
https://www.htamil.org/00224

intellect®
Design for Digital

இன்டெலக்ட் டிசைன் அரீனா லிமிடெட்

(CIN: L72900TN2011PLC080183)

பதிவு அலுவலகம் : கேரக்ஸ் சென்டர், 244 (பழைய எண்.713), அண்ணா சாலை, சென்னை 600 006. தலைமை அலுவலகம் : ப்ளாட் எண்.3/G-3, சிப்காட் IT பூங்கா, சிறுசேரி, சென்னை - 600 130
தொலைபேசி : **044-6700 8000** தொலைநகல் : **044-6700 8874** இணையதளம் : **www.intellectdesign.com** மின்னஞ்சல் : **shareholder.query@intellectdesign.com, company.secretary@intellectdesign.com**

31 டிசம்பர் 2021 அன்று முடிவடைந்த காலாண்டு மற்றும் காலத்திற்கான, இன்டெலக்ட் டிசைன் அரீனா லிமிடெட்–ன் தணிக்கை செய்யப்படாத தனித்தன்மையான மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிசார் முடிவுகளின் அறிக்கை

(ரூ. மில்லியன்களில்)

விவரம்	ஒருங்கிணைக்கப்பட்டது		
	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த காலம்
	டிசம்பர் 31, 2021 (தணிக்கை செய்யப்படாதது)	டிசம்பர் 31, 2020 (தணிக்கை செய்யப்படாதது)	டிசம்பர் 31, 2021 (தணிக்கை செய்யப்படாதது)
செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	5,082.90	3,821.91	13,687.80
இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, வழக்கத்திற்கு மற்றும்/அல்லது மாறான இனங்களுக்கு முன்)	1,181.78	802.21	3,042.79
இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் (வழக்கத்திற்கு மற்றும்/அல்லது மாறான இனங்களுக்கு பின்)	1,150.73	864.63	2,936.45
இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு பின் (வழக்கத்திற்கு மற்றும்/அல்லது மாறான இனங்களுக்கு பின்) – நிறுவன உரிமையாளர்கள் காரணம் கூறவேண்டியது	1,008.54	803.67	2,538.22
இந்தக் காலத்திற்கான முழுமையான வருமானம் [இந்தக் காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம்/(நஷ்டம்) மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது] - நிறுவன உரிமையாளர்கள் காரணம் கூறவேண்டியது	1,173.27	962.22	2,796.04
சமபங்கு மூலதனம்	671.74	663.32	671.74
ஒரு பங்கிற்கான வருவாய் (ஆவண மதிப்பு ரூ. 5)			
1. அடிப்படை நிலையில்	7.57	6.07	19.16
2. மாற்றியமைக்கப்பட்ட நிலையில்	7.21	5.75	18.26

விவரம்	தனித்தன்மையானது		
	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த காலம்
	டிசம்பர் 31, 2021 (தணிக்கை செய்யப்படாதது)	டிசம்பர் 31, 2020 (தணிக்கை செய்யப்படாதது)	டிசம்பர் 31, 2021 (தணிக்கை செய்யப்படாதது)
செயல்பாடுகளிலிருந்து மொத்த வருமானம்	3,147.47	2,713.62	9,056.34
இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, வழக்கத்திற்கு மற்றும்/அல்லது மாறான இனங்களுக்கு முன்)	499.81	699.68	1,926.86
இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு முன் (வழக்கத்திற்கு மற்றும்/அல்லது மாறான இனங்களுக்கு பின்)	499.81	699.68	1,926.86
இந்தக் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) வரிக்கு பின் (வழக்கத்திற்கு மற்றும்/அல்லது மாறான இனங்களுக்கு பின்) – நிறுவன உரிமையாளர்கள் காரணம் கூறவேண்டியது	396.81	665.91	1,503.44
இந்தக் காலத்திற்கான முழுமையான வருமானம் [இந்தக் காலத்திற்கான வரிக்குப் பிந்தைய லாபம்/(நஷ்டம்) மற்றும் வரிக்குப் பிந்தைய இதர முழுமையான வருமானங்களை உள்ளடக்கியது] - நிறுவன உரிமையாளர்கள் காரணம் கூறவேண்டியது	567.03	771.58	1,781.05
சமபங்கு மூலதனம்	671.74	663.32	671.74
ஒரு பங்கிற்கான வருவாய் (ஆவண மதிப்பு ரூ. 5)			
1. அடிப்படை நிலையில்	2.98	5.02	11.35
2. மாற்றியமைக்கப்பட்ட நிலையில்	2.84	4.76	10.81

குறிப்புகள் :

1. டிசம்பர் 31, 2021 அன்று முடிந்த காலாண்டு மற்றும் காலத்திற்கான, தனித்தன்மையான மற்றும் ஒருங்கிணைந்த நிதிசார் அறிக்கைகள், ஜனவரி 27, 2022 அன்று நடைபெற்ற இயக்குநர்கள் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தனித்தன்மையான மற்றும் ஒருங்கிணைந்த நிதிசார் அறிக்கைகளை, நிறுவனத்தின் சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் குறைந்தபட்ச ஆய்வு செய்துள்ளனர். கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 133, விதி 3, கம்பெனிகள் விதிகள் 2015 (இந்திய கணக்கியல் தரநிலைகள்) மற்றும் பொருத்தமான திருத்தங்களின் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி, இந்திய கணக்கியல் தரநிலைகளுக்கேற்ப (Ind-AS) இந்த நிதிசார் முடிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
2. Ind-AS 108 இயக்க பிரிவுகளின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள "மேலாண்மை அணுகுமுறை" அடிப்படையில், நிறுவனத்தின் செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, 'மென்பொருள் தயாரிப்பு உரிமம் மற்றும் தொடர்புடைய சேவைகள்' என்ற ஒற்றை வணிகப் பிரிவின் பல்வேறு செயல்திறன் குறிப்பீடுகள் ஆய்வு செய்யப்பட்டு அதன் அடிப்படையில் வளங்கள் ஒதுக்கப்படுகின்றன.
3. கொரோனா வைரஸ் (COVID-19) நோய்த்தொற்று உருவானது, உலகளவில் பொருளாதார நடவடிக்கைகளில் மந்தநிலையை ஏற்படுத்தியுள்ளது. வர்த்தகத்தில் பெறத்தக்கவைகள், கட்டணம் விதிக்கப்படாத ஆனால் திரட்டப்பட்ட வருவாய், ஒருங்கிணைப்பு மீது நல்லெண்ணம், புலப்படாத சொத்துக்கள் மற்றும் வளர்ச்சியின் கீழ் உள்ள புலப்படாத சொத்துக்கள் உள்ளிட்டு, COVID-19 தாக்கத்தினால் செயல்பாடுகளில் ஏற்படக்கூடிய விளைவுகளை நிறுவனம் கருத்தில் கொண்டுள்ளது. நோய்த்தொற்று காரணமாக உலகளாவிய நிலைமைகளில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மைகள் தொடர்பான அனுமானத்தை பொறுத்த வரையில், இந்த நிதிநிலை முடிவுகளை ஒப்புதல் அளித்த தேதியின்படி, நிறுவனம் கிடைக்கக்கூடிய பல்வேறு தகவல்களைப் பயன்படுத்தியுள்ளது. பயன்படுத்தப்பட்ட அனுமானங்களில் நிறுவனம் உணர்திறன் பகுப்பாய்வை மேற்கொண்டு, தற்போதைய குறிகாட்டிகளின் அடிப்படையில், இந்த சொத்துக்களின் சுமந்து செல்லும் தொகையை மீட்டெடுக்க நிறுவனம் எதிர்பார்க்கிறது. உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கம் இந்த தனித்தன்மையான மற்றும் ஒருங்கிணைந்த நிதி முடிவுகளின் ஒப்புதலின் தேதியில் மதிப்பிடப்பட்டதிலிருந்து வேறுபட்டிருக்கலாம். மேலும், எதிர்கால பொருளாதார நிலைமைகளில் எந்தவொரு மாற்றத்தையும் நிறுவனம் தொடர்ந்து கண்காணிக்கும்.
4. ஒருங்கிணைக்கப்பட்ட நிதி முடிவுகளில் டிசம்பர் 31, 2021ல் முடிவடைந்த காலத்திற்கான பணியாளர் நலன் செலவுகளில், டிசம்பர் 31, 2021ல் முடிவடையும் காலத்திற்கான மொத்த ஊழியர் பங்கு அடிப்படையிலான இழப்பீடாக 85 மில்லியன் மற்றும் டிசம்பர் 31, 2021ல் முடிவடைந்த காலாண்டில் 326 மில்லியன் ஆகியவை அடங்கும் மற்றும் பேங்க் ஆஃப் அமெரிக்கா, என்.ஏ–விலிருந்து இன்டெலக்ட் டிசைன் அரீனா இன்க், ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்ளவும், ஊதியச் செலவுகளுக்கு பயன்படுத்தவும், சம்பள பாதுகாப்பு திட்டத்தின் கீழ், ஜூன் 2021ல் கடன் தொகையாகப் பெற்ற 92 மில்லியன் ரூபாய் தள்ளுபடி செய்ததும் அடங்கும்.
5. வருங்கால வைப்பு நிதி மற்றும் கிராஜ்யூட்டிக்கு நிறுவனத்தின் பங்களிப்புகள் தொடர்பான சமூக பாதுகாப்பு குறியீடு, 2020 ('Code')க்கு இந்திய பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. மாற்றங்கள் அமலுக்குவரும் தேதி அறிவிக்கப்படவில்லை மற்றும் தொடர்புடைய விதிகள் இன்னும் வடிவமைக்கப்படவில்லை. இதைக் கருத்தில் கொண்டு, மாற்றத்தின் தாக்கம் ஏதேனும் இருந்தால், குறியீடு அறிவிக்கப்பட்ட காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படும்.
6. மேலும் விவரங்களுக்கு, www.intellectdesign.com என்ற கம்பெனி இணையதளம் அல்லது www.nseindia.com அல்லது www.bseindia.com என்ற பங்கு வர்த்தக இணையதளங்களில் காணலாம்.

இன்டெலக்ட் டிசைன் அரீனா லிமிடெட்–க்காக
கையொப்பம்
அருண் ஜெயின்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்

இடம் : சென்னை
தேதி : ஜனவரி 27, 2022